**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.467/2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw9 (Additional Witness) |
| Name | : தினேஷ்குமார் |
| Father/Husband's Name | : தியாகராஜன் |
| Village | :பெருங்களத்தூர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2026.

**முதல் விசாரணை:**

1. 18.08.2025 அன்று எங்கள் சாய் சிறப்பு மருத்துவமனையில் பணிபுரிந்த திரு.பாலமுருகன் அவர் தற்போது எங்கள் மருத்துவமனையில் பணிபுரியாத காரணத்தினால் எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கும் படி மேற்படி மருத்துவமனையில் இருந்து அங்கீகாரம் செய்து கடிதம் கொடுத்ததின் பெயரில் நான் சாட்கியம் அளிக்கிறேன். அந்த அங்கீகார கடிதம் **அதசா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. கடந்த 18.08.2025 அன்று காலை 9.15 மணியளவில் மேற்சொன்ன மருத்துவர் பாலமுருகன் பணியில் இருந்த போது நந்தகோபால் என்பவர் தானாக மருத்துவமனையில் மருத்துவ சிகிச்கைக்காக வந்திருந்தவரை மேற்சொன்ன

மருத்துவர் அவரை பரிசோதனை செய்த போது அவர் நல்ல மனநிலையில் இருந்ததாகவும், மேற்படி அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு தலை சுற்றல் இருந்ததாகவும், அவருடைய வலது கையில் வீக்கம் மற்றும் வலி இருந்ததாகவும், மேற்படி காயம் எப்படி ஏற்பட்டது என்று கேட்ட போது 4 தெரிந்த நபர்கள் கையால் அடித்ததாக சொன்னார். மேற்படி நந்தகோபாலுக்கு வெளிபுற காயங்கள் ஏதும் இல்லை என்றும், உட்காயங்கள் ஏற்பட்டதால் அது சம்மந்தமாக அவருக்கு X–ray எடுக்குமாறு அறிவுறுத்தி உள்ளார்.

3. மேற்படி X–ray ல் அவருக்கு ஏற்கனவே எலும்பு முறிவு ஏற்பட்டு மாறாக கூடி இருந்ததால் அதே இடத்தில் அடிக்கும் போது தடுத்ததால் ஏற்பட்ட காயத்தால் அவருக்கு வீக்கம் ஏற்பட்டது. மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று மேற்படி மருத்துவர் சான்று வழங்கி உள்ளார். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று **அதசா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் மேற்படி மருத்துவரை விசாரணை செய்தனர்.

## <u>குறுக்கு விசாரணை</u>

18.08.2025 அன்று நான் அந்த மருத்துவமனையில் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். அதசா.ஆ.5 ல் சொல்லப்பட்டுள்ள பாண்டியன் மருத்துவர் யார் என்றால் எங்களது மருத்துவமனையின் நிறுவனர். காயம்பட்ட நபர் காலை 9.15 மணிக்கு எங்களது மருத்துவமனையில் தானாக சேர்ந்தாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசா.ஆ.5 ல் சம்பவம் காலை 7.30 மணியளவில் நடந்ததாகவும், எங்களது மருத்துவமனைக்கு 9.15 மணிக்கு சுமார் 2 மணி நேரம் கழித்து தான் சேர்ந்தார் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு கையில் ஏற்பட்ட வீக்கமானது கல் தடுக்கி கீழே விழும் போதோ, வாகனத்தில் ஏறும் போது

இடித்தாலோ ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபருக்கு X–ray எடுக்கப்பட்டது. அதை காயம்பட்ட நபரிடம் கொடுத்துவிட்டோம்.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu